1995 ஏப்ரல் 6]
247—

திருவண்ணாமலையிலிருந்து புதிய பேருந்துகள் இயக்குதல்

***36594**—*திரு. தா. வேடியப்பன்:*

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலையிலிருந்து வளையல் காரகுளத்திற்கு காப்பலூர், சோழங்குப்பம், காங்கேய்னூர், நம்மியத்தூர், பியம்பட்டு வழியாக புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் இயக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : கோரிக்கை தடத்தின் சாலை கனரகப் பேருந்துகள் இயக்க முடியாத நிலையில் உள்ளதால் பேருந்து இயக்க சாத்தியமில்லை.

திரு.தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் இப்படிப்பட்ட ஏழை எளிய மக்கள் வாழக்கூடிய கிராமப்பகுதிகளில் எல்லாம் சாலைவசதிகள் தேவை என்று கேட்டவுடனே பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் சிறப்பான முறையில் இந்தச் சாலையை மேம்பாடு செய்வதற்காக, 3 கிலோமீட்டர் தார்ச் சாலை அமைப்பதற்காக கிராமச் சாலைகள் திட்டத்திலே எடுத்து, சிறப்பான முறையில் சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நல்ல சாலை, தார்ச் சாலையாக மேம்படுத்துவதற்கு எல்லாப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வருங்காலத்திலாவது இந்தச் சாலை அமைத்தவுடனே அந்தப் பஸ்ஸை விடுவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசீலனை செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலை அமைக்கின்ற பணிகள் இப்போது நடைப்பெற்றுக்கொண்டிருக்கிறது. முள் வேலிகள், புதர்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால்தான் நாங்கள் இயக்கமுடியவில்லை என்று சொன்னேன். சாலை அமைத்தவுடனே நீங்கள் சொன்ன ஒரே வார காலத்தில் பேருந்து இயக்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய போளூர் தொகுதிவாழ் மக்கள் சார்பாகவும், அப்பகுதியில் இருக்கக்கூடிய வலையவார்குளம், காங்கேயனூர், நம்மேந்தல் கிராமப் பகுதி மக்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்து, வருங்காலத்தில் இந்தச் சாலையை சரி செய்தவுடனே பேருந்துகளை விடுவதற்கு அமைச்சரவர்கள் ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு வாரத்தில் விடுகிறேன் என்று சொல்லிவிட்டாரே.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: சாலை அமைத்த ஒரே வார காலத்தில் பேருந்து இயக்குவதற்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 248, திரு.எஸ். ஆசைமணி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

248—

புளியஞ்சேரியில் கால்நடை மருந்தகம் கட்டுதல்

***22285**—திரு. எஸ். ஆசைமணி:*

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா-

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, கொடவாசல் ஒன்றியம், புளியஞ்சேரி, விக்ரபாண்டியம், வல்லம் ஆகிய கிராமங்கள் பயனடைய புளியஞ்சேரி கிராமத்தில் கால்நடை மருந்தகம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, கொடவாசல் ஒன்றியத்தில் புளியஞ்சேரி கிராமத்தில் கால்நடை மருந்தகம் கட்டித்தர தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS